# தூர நோக்கற்ற - வினைத்திறனற்ற செயற்பாடுகள்
# சமுர்த்திச் சங்கத்திற்கு தற்காலிகக் குழு நியமனம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

**யாழ் மாவட்டத்தில் சமுர்த்திச் சங்கத்தின் செயற்பாடுகள் வினைத்திறனற்ற வகையிலும் தூர நோக்கற்ற குறுகிய செயற்பாடுகளுடனும் இருந்து வருகின்றமையால், எந்த நோக்கத்திற்காக சமுர்த்தி திட்டம் கொண்டு வரப்பட்டதோ அதனை முழுமையான இலக்கு நோக்கிக் கொண்டு செல்வதற்காக தற்காலிகமாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

2➤




# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 22 வியாழக்கிழமை 04.04.2024 கதிர் 219









## அதிரடிச் சோதனையில் சிக்கிய வர்த்தக நிலையங்கள் பண்டத்தரிப்பில் சுகாதாரப் பரிசோதகர்கள் களத்தில்

**விதி மீறியோருக்குத் தண்டப்பணம் – ஒரு கடைக்குச் சீல்!**

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குகளில் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு வர்த்தக நிலையத்தினை சீல் வைத்து மூடுமாறும் மன்று 2➤



## புங்குடுதீவிலிருந்து சட்டவிரோதமாக மாடுகள் கடத்தல் யாழ் பொலிஸ் நிலைய அதிகாரியுட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம் – புங்குடுதீவு பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாடுகளை கடத்தி வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் உட்பட மூவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவிலிருந்து மண்டைதீவு நோக்கி சட்ட விரோதமாக மாடுகள் கடத்தப்படுவதாக 2➤

# அனுரவுடன் விவாதத்திற்கு தயார்! ஜேவிபியின் சவாலை ஏற்றார் சஜித்

நாட்டில் நிலவும் பிரச்சினைகள் குறித்து விவாதம் தேவை என மக்கள் பேசிக்கொள்வதாகவும், அவ்வாறானதொரு விவாதம் நடைபெறுவதை தாம் ஏற்றுக்கொள்வதுடன் விவாதங்களை நடத்துவது ஜனநாயக சமூகத்தின் உயர் பண்பாகும் எனவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எனவே, தாம் எந்தவொரு விவாதத்திற்கும் தயார் எனவும், பொருளாதாரம், சமூகம், அரசியல், சர்வதேசம் போன்ற துறைகளில் எந்தவொரு தலைப்பிலும் விவாதிக்கத் தயார் எனவும் எதிர்க்கட்சித் 2➤





## சு.கவின் தலைவர் பதவியை தற்காலிகமாக இழந்த மைத்திரி

**ஏப்ரல் 18 ஆம் திகதி வரை இடைக்காலத் தடையுத்தரவு**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏப்ரல் 18 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான மைத்திரிபால சிறிசேன தலைவர் பதவியில் தொடர்வதற்கு இடைக்கால தடை விதிக்குமாறு தாக்கல் 2➤

## ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி நாளை அங்குரார்ப்பணம் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா எம்.பி. க்கள் குழு கைச்சாத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் கூட்டணி அமைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வுகள் நாளை (5) கொழும்பு ஜே.ஆர். ஜயவர்தன கேந்திர நிலையத்தில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அதன்படி, சுதந்திர மக்கள் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜி.எல். பீரிஸ், டிலான் பெரேரா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி சேர்வது தொடர்பில் கைச்சாத்திடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கட்சியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும், கட்சியின் கீழ்மட்டம் தொடக்கம் உயர்மட்டம் வரையிலான பதவிகளை வகிக்கும் கட்சி உறுப்பினர்கள் இந்த புதிய கூட்டணி தொடர்பில் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி சக்தியுடன் ஏற்கனவே இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் தமது கட்சியுடன் அவ்வாறே தொடர்ந்து இருக்கின்ற அதேவேளை, கூட்டணி அமைத்தல் என்ற அடிப்படையில் சுதந்திர மக்கள் சபை மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படும் நிகழ்வே நாளைய தினம் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-15)

## பாடசாலை இல்ல வடிவமைப்புத் தொடர்பான விசாரணை பொலிசாருக்கு உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியில் இடம்பெற்றிருந்த இல்ல அலங்காரம் தொடர்பாக அதிபார், ஆசிரியர்கள், மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது.

பொலிஸார் சட்டத்தை மீறி பாடசாலைக்குள் நுழைந்ததுடன், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை விசாரணைக்கு அழைத்த மைக்காக பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் மனித உரிமைகள் 2➤

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

## அதிரடிச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிட்டுள்ளது. பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இ. யொனிப்பிரகலாதன் தலைமையில் அப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது, ஒரு வர்த்தக நிலையத்தில் 19 வகையான காலாவதியான பொருட்கள் 245 இனை விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் உரிமையாளருக்கு 95 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன், கடையை சீல் வைத்து மூடுமாறும் மன்று உத்தரவிட்டது.

பிறிதொரு வர்த்தக நிலையத்தில்ல் புழு மொய்த்த, வண்டரித்த அரிசி, கடலைப்பருப்பு என்பவற்றை விற்பனைக்காக க்காட்சிப்படுத்தி வைத்திருந்த உரிமையாளருக்கு 65 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் காலாவதியான உணவுப்பொருட்கள் வைத்திருந்த மற்றுமொரு நிறுவன உரிமையாளருக்கு 2 ஆயிரத்து 500 ஷரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

சுகநலத்திற்கு ஒவ்வாத நிலையிலும் காலாவதியான, வண்டடித்த மா, உப்பு போன்றவற்றைக் கொண்டு மிக்சர் உற்பத்தியினை மேற்கொண்டவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதேவேளை ஆனைக்கோட்டைப் பகுதியில் கு.பாலேந்திரகுமார் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, மோசமான நிலையில் உணவகத்தை நடாத்திய இருவரிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆயினும், இருவரும் நீதிமன்றுக்குச் சமுகமளிக்காமையால் இருவரிற்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (01)

## தூர நோக்கற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சமுர்த்தி வேலைத் திட்டங்களை சமூக வலுவூட்டலை நோக்கி முன்னெடுக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய இன்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நிலையில், அமைச்சரால் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக அதிகளவான சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தற்போதுள்ள அபிவிருத்திச் சங்கத்தினால் எவ்வித நன்மைகளோ அன்றி செயற்பாடுகளோ நடைபெறுவதில்லை என்றும் வெறுமனே பழிவாங்கல்களும் இடமாற்றங்களுமே முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன், நிர்வாகத்தை மீள தெரிவுசெய்யுமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே தற்காலிக விசேட குழு ஒன்று அமைக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர், - எமது மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் தேசிய வேலைத் திட்டங்கள எமது மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாசைகளையும் நிறைவேற்றும் வகையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். இதை வேறொரு இடத்திலிருந்து நிர்வகிக்கவோ நிர்ணயிக்கவோ முடியாது. அவ்வாறான நிலைக்கு நான் அனுமதிக்கவும் மாட்டேன்.

அதனடிப்படையில் பிரதேச ரீதியான நிர்வாகங்களை கட்டமைப்பிலுள்ள இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டுதான் மாவட்ட ரீதியில் ஒரு விசேட குழுவை நியமிமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அத்துடன் குறித்த குழு துரிதமாக பிரதேச ரீதியான கட்டமைப்பை உருவாக்கி சமுர்த்தித் திணைக்களத்தினை வினைத்திறனாக கொண்டு நடத்துவதற்கும் மக்களுக்குத் தேவையான சேவைகளை தடையின்றி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும், என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார். (01)

## புங்குடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய சுற்றி வளைப்பின்போது மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர் உட்பட மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட எட்டு மாடுகளும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர் தற்போதும் யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக ஊர்காவல்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (01)

## அநுரவுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சியினரை தம்முடன் நேரடி விவாதமொன்றிற்கு வருமாறு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி யினர் அண்மையில் சவால் விடுத்திருந்தமையும், தமது கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயகவுடன் எதிர்க்கட்சி தலைவரை விவாதமொன்றிற்கு வருமாறு ஜேவிபி யினர் பதிலுக்கு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அந்த சவாலை ஏற்கும் விதமாகவே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தான் விவாதத்திற்கு தயார் என மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எதிர்க்கட்சியாக இருக்கின்ற காலத்திலும் கூட நாட்டுக்கு சேவையாற்றியது மக்கள் சக்தியே எனவும், விவாதங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் மக்களுக்கு சேவை செய்து மதிப்பளிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். விவாதத்திற்கான சவாலை தான் ஏற்றுக் கொள்வது போலவே, மக்களுக்கு திறம்பட சேவையாற்றும்சவாலை நடைமுறைபடுத்திக் காட்டுமாறு எதிர்தரப்பினருக்கு சவால் விடுக்கின்றேன்" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-14)

## சு.கவின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சில தினங்கள் முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, இராஜாங்க அமைச்சர் லசந்த அலகிய வண்ண மற்றும் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

கட்சித் தலைமையகத்தில் கடந்த மார்ச் 30 ஆம் திகதி அன்று செயற்குழுவில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நீக்கப்பட்டு குறித்த பதவிக்கு மகியங்கனை தொகுதி அமைப்பாளர் கே.பி. குணவர்தன நியமிக்கப்பட்டிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண பொருளாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு குறித்த பதவிக்கு மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஹெக்டர் பெத்மகே நியமிக்கப்பட்டிருந்தார்.

அதேபோல், அமைச்சர் மஹிந்த அமரவீர சிரேஷ்ட உப தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்ட நிலையில் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியியிலிருந்து பதவி நீக்கம் செய்தமைக்கு எதிராக நீதிமன்றத்திற்கு சென்றதையடுத்து அவர்களை நீக்குவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தது. (04,அ)

## பாடசாலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளார். இதன்படி நாளை 5 ஆம் திகதி பிற்பகல் 2.30 க்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முன்னிலையாகி விளக்கமளிக்கும்படி அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. (01)

# நந்தசேன எம்.பி. திடீரென மரணம்



*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.எச்.நந்தசேன (வயது 69) காலமானார்.*

*திடீர் சுகவீனம் காரணமாக நேற்று அவர் அனுராதபுரம்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தநிலையில், அவர் இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.*

*2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதன் முறையாக அவர், நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*இந்தநிலையில், அவரின் மறைவையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அனுராதபுரம்மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஜி.வீரசேன நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*மாவட்ட முன்னுரிமைப் பட்டியலில் எம்.ஜி.வீரசேன 38 ஆயிரத்து 241 விருப்பு வாக்குகளைபி பெற்று நந்தசேனவுக்கு அடுத்த இடத்தில் உள்ளார். (அ)*



# கல்முனை மாநகர பொதுச்சந்தை வர்த்தகர் சங்கத்தின் இப்தார்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று புதன்கிழமை (03) சந்தை முற்றத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் அஹமட் லெப்பை ஹாஜியார் தலைமையிலும் அதன் செயலாளர் கே.எல். கபீரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் உட்பட அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# தேசிய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினராக பாலமுனை மின்ஹாஜ் மாணவன் தெரிவு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை, பாலமுனைக் கிராமத்தில் இருந்து முதல் தேசிய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினராக பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய மாணவன் அம்ரி அஹமட் தெரிவாகியுள்ளார்.

தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை நாடாளுமன்றத்தின் மாணவர் நாடாளுமன்ற எண்ணக்கருவுக்கு அமைய, ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த நாடளாவிய ரீதியில் மாணவர் நாடாளுமன்றங்களை அமைப்பதன் இறுதிக்கட்டத்தை குறிக்கும் வகையில் இந்த தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு கல்வி அமைச்சின் முன்முயற்சியில் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய, நாட்டின் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாணவ மாணவிகள் இந்த தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் அங்கத்தவர்களாக பங்குபற்றியிருந்தனர்.

தேசிய மாணவர் நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# “பைத்துல் முகந்தஸ்” தினம் புத்தளத்தில் அனுட்டிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கடந்த 45 வருடங்களாக சர்வதேச நாடுகளால் அனுட்டிக்கப் பட்டு வரும் “பைத்துல் முகந்தஸ்” தின நிகழ்வு நாளை 5 ம் திகதி, ரமழானின் இறுதி வெள்ளிக்கிழமை புத்தளம் பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகை யுடன் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

பலஸ்தீனுக்கு ஆதரவாக ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்று இறுதியாக சொற்பொழிவுடன் குறித்த நிகழ்வு நிறைவுபெறும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.



# உலக நாடக நாளில் மஹாகவி காளிதாசர்

(ஹஸ்பர் ஏ.எச்)

உலக நாடக தினத்தினை முன்னிட்டு மார்ச் 27ஆம், 28ஆம் திகதிகளில் “மஹாகவி காளிதாசர்” எனும் நாடகம் மேடையேறியது.

நாடக தினத்தினை முன்னிட்டு பல்கலைக்கழகங்களும் நாடகக் குழுக்களும் பல நாடகங்களை மேடையேற்றியதோடு அதையொட்டிய பல நிகழ்வுகளையும் நடத்தியுள்ளன.

அது போல், களரி அரங்கக் கலை நிதியத்தின் தயாரிப்பிலே திருகோணமலையிலுள்ள உவர்மலை தேசிய பாடசாலையில் உலக நாடக தினத்தை முன்னிட்டு மஹாகவி காளிதாசர் ஆற்றுகையானது மேடையேறியது.

மஹாகவி காளிதாசர் நாடகத்தில் இலங்கையின் கிழக்கு, வடக்கு, மலையகம் எனப் பல பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்து சிறப்பித்தனர்.






# யானைத் தாக்குதலுக்கு உள்ளானவருக்கான நிதியுதவி வழங்கி வைப்பு

(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மலையடிக்கிராமம் - 4 ஐச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் வீரச்சோலையில் வைத்து யானைத் தாக்குதலுக்கு உட்பட்டு காயமடைந்தமைக்கான மருத்துவ நிவாரணக் கொடுப்பனவு இன்று வழங்கிவைக்கப்பட்டது.

சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை, மற்றும் பணிப்புரைக்கமைய கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம். தாஸீம் இந்த நிதியினைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ் அஸாருதீனும் கலந்து கொண்டார்.

# இப்படி ஒரு நோயா?

**விஜயராம் தனுஷா**
*ஊடகக்கற்கைகள் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகை தந்து தங்கியிருந்து தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாணவ மாணவிகள் யாழ்ப்பாணம் நகரம் முழுவதுமே காணப்படுகின்றனர். இவ்வாறு வசிக்கும் மாணவ மாணவிகள் பல்வேறு வாடகை வீடுகளிலும் பல்கலைகழக விடுதிகளிலும் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மாணவர்கள் அதிலும் குறிப்பாக விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் இருந்து பல்கலைகழகம் செல்லும் மாணவிகள், சில அடையாளம் தெரியாத நபர்களால் அநாகரிகமான முறையில் பாலியல் சுரண்டலுக்கு முகம்கொடுப்பதாக கவலை வெளியிடுகின்றனர்.

குறித்த செயற்பாடு குறித்து மாணவர்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் குறித்த நபர்களின் செயற்பாடுகளை நிறுத்த முடியவில்லை, அவர்களை கண்டறியவும் முடியவில்லை.

இச்செயற்பாடு காரணமாக மாணவிகள் பாதைகளில் நடமாட அச்சப்படுகின்றனர். மாணவிகள் மட்டுமல்லாது அவ்வழியில் நடமாடும் பெண்களும் இவ்வகை அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் தெரிவித்தனர்.

**அப்படி என்னதான் நடக்கின்றது பாதைகளில்?**

பெண்கள், பல்கலைகழக மாணவிகள் தனியாக பாதைகளில் செல்லும் போது அடையாளம் தெரியாத ஆடவர்கள் சிலர் தங்கள் பாலுறுப்பைக் காட்டி இன்புறுகின்ற கேவலமான செயலைச்செய்துவருகின்றனர். இது பார்ப்பவரை அருவருப்படைய செய்கின்றதுடன் முகம்சுழிக்கவும் வைக்கின்றது.

இவர்கள் இவ்வாறு நடந்துகொள்வதற்கான காரணம் எதுவாக இருக்கும்? என ஆய்வு செய்யும்போது, இவ்வாறான செயற்பாடுகள் ஒருவித மனநோய் எனும் பதில் மனநல மருத்துவர் தாமோதரம்பிள்ளை உமாகரன் அவர்களிடமிருந்து கிடைத்தது.

அவர் மேலும் இது பற்றி கூறுகையில், EXHIBISANISM என சொல்லக்கூடிய ஒருவித நடத்தை மற்றும் மன ரீதியான நோய் இதுவாகும். இது பெரும்பாலும் ஆண்களிடமே அதிகமாக காணப்படும். PEDOPHILIAS எனக் கூறக்கூடிய 8 வகை நோய்களுக்குள் இதுவும் ஒன்று. இந்நோய் மையநீரோட்டத்திலிருந்து விலகிய ஒரு செயற்பாடு ஆகும்.

EXHIBISANISM ஆளுமை கோளாறு மற்றும் தாழ்வு மனப்பான்மை ஆகிய இரு விடயங்களின் அடிப்படையில் வெளிப்படுகின்றது.

ஆளுமைக் கோளாறு எனும்போது பெறும்பாலும் சமூகத்திற்கு விரோதமாக செயற்படுகின்ற சமூக பிரள்வு மற்றும் சமூகம் மீது எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்பினரிடமே காணப்படும். இவர்கள் சமூகத்தை பழிவாங்கும் எண்ணத்துடனும் எதிர்ப்பை காட்டுவதற்கான ஓர் உத்தியாகவும் இத்தகைய செயற்பாடுகளை செய்கின்றனர்.

இவ்வாறு சமூக விலகிய நடத்தைக்கொண்டவர்களே பெரும்பாலும் பாலியல் துஷ்பிரயோகங்கள், போதைப்பொருள் பழக்கங்கள், மற்றும் குற்றநடத்தைகள் உள்ளவர்களாக காணப்படுவர்.

தாழ்வு மனப்பான்மை எனும்போது தன்னம்பிக்கை குறைந்தவர்களைச் சொல்லலாம். அதாவது தன்னை பார்த்து மற்றவர்கள் பயப்பட வேண்டும் என எண்ணுவார்கள். ஆனால் அதற்கான தைரியம் இல்லாதவர்கள் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எதிர்ப்பாலினத்தவர்களை





அச்சமடையச்செய்து அதன் மூலம் தான் தைரியசாலி என எண்ணி இன்பமடைவர். இவ்வாறான எண்ணங்களே காலப்போக்கில் EXHIBISANISM போன்ற மனநோயாக மாறுகிறது.

இவ்விருதரப்பினரும்வெறுமனே EXHIBISANISM மாத்திரமல்லாது அதனோடு தொடர்புடைய வேறுவகை மனநோய்களாலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் 16-22 மற்றும் 35 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்களிடமே இத்தாக்கம் அதிகமாக காணப்படும்.

இவ்வாறான விலகிய நடத்தையில் ஈடுபடுபவர்களைப் பார்க்கும்போது பெரும்பாலும் கல்வியறிவு இல்லாதவர்களாகவும், வறுமையிலும், பொதுவான யோசனை குன்றியவர்களாகவும், பிறழ்வு நடத்தை கொண்ட சமூக பிண்ணனியிலிருந்து வந்தவர்களாகவுமே காணப்படுவர். காரணம் அவர்கள் வாழும் சூழல், பார்க்கும், கேட்கும் விடயங்கள் என்பன அவர்களை ஆரம்பத்தில் அது அவர்களின் நடத்தைசார் பிறழ்வாக மாத்திரமே காணப்படும். எப்போது அதனை கட்டுப்படுத்த முடியாமல் தொடர்ந்து ஈடுபடுகின்றனரோ அப்போது அந்நிலை ஒரு மனநோயாக மாறுகிறது. இளைஞர்கள் மட்டுமன்றி திருமணமான ஆடவர்களும் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களின் குடும்பவாழ்க்கை பாதிக்கும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

இளைஞர்கள் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு சமூக மதிப்பை இழக்கவும் நேரிடும். நோய் தீவிர நிலைக்கு செல்பவர்களை குணப்படுத்துவது சற்று கடினம். ஹோமோன் வீரியத்தை குறைப்பதற்கு மருந்துகள் வழங்கலாம். அதன்மூலம் சற்று எதிர்பார்த்த பலன் பெறலாம். குறிப்பாக சமூகத்திற்கு எதிராக சமூகத்தை பழிவாங்குவதற்காக இதனை மேற்கொள்பவர்களை ஹோமோன் தடுப்பு செய்வதன் மூலம் மாத்திரமே குணப்படுத்த முடியும்.

தீவிர தன்மை குறைந்தவர்களுக்கு தொடர்ச்சியான ஆலோசனை, தொடர்ச்சியான வைத்தியத்தின் மூலம் குணப்படுத்தலாம். இல்லையேல் அவர்களாகவே சிந்தித்து திருந்த வேண்டும்.

முற்றுமுழுதாக சமூகத்தில் இத்தகைய செயற்பாடுகள், இத்தகைய நபர்கள் நடமாட்டத்தை ஒழிக்கவேண்டுமாயின் இவ்வாறான மனநோய் நிலைமைகள் பற்றி சரியான தெளிவும் விளக்கமும் விழிப்புணர்வும் சமூகத்திற்கும் இளைஞர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாக கட்டிளமைப் பருவத்தினரின் பாடங்களில் EXHIBISANISM போன்ற விடயங்கள் பற்றியும் அதன் பாரதூரமான விளைவுகள் பற்றியும் தெளிவூட்ட வேண்டும், என மனநிலை வைத்திய நிபுணரும் யாழ்பாணப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளருமான தாமோதரம்பிள்ளை உமாகரன் கேட்டுக்கொண்டார்.

# மன்னார் – முசலி பிரதேச விவசாயிகளுக்கு அதியுயர் விளைச்சல் தரும் மிளகாய் விதைகள்

மன்னார், முசலி பிரதேசத்தின் அகத்திமுறிப்பு அளக்கட்டு, பொற்கேணி அளக்கட்டு, வேப்பங்குளம் அளக்கட்டு, பிச்சைவாணிபங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த, தெரிவுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு, அதி உயர் விளைச்சல் தரக்கூடிய மிளகாய் விதைகள் வழங்கும் வைபவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) அளக்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தலைமையில், முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ் எம் எம். பைஷரூஸின் ஏற்பாட்டில், இந்தியாவின் பாலாஜி வென்சர்ஸ் லங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையில், மீள்குடியேறியுள்ள முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மேற்படி உயர்தரத்திலான மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த விவசாய ஆலோசகரான கணேஷ், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு மற்றும் மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாஹிர் உட்பட பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.







# திருகோணமலை மாவட்ட செயலக இப்தார் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் இப்தார் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இப்தார் நிகழ்வானது நேற்று (03) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இன மத நல்லுணர்வை மேம்படுத்தும் நோக்கிலேயே இஸ்லாமிய மக்களால் கடைப்பிடிக்கும் இப்தார் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இந்நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நோன்பின் விஞ்ஞான ரீதியான விளக்கம், நோன்பின் மகத்துவம் மற்றும் சிறப்புத்தன்மை பற்றி இதன்போது எடுத்து கூறப்பட்டது. மேலும் பாடல் மற்றும் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன. இதன்போது நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமது திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவிநிலை அதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

# வினைத்திறன் மிக்க குத்பாப் பேருரைகள் காத்தான்குடியில் பயிற்சிச் செயலமர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ராபிதத்துந் நளீமிய்யீன் - நளீமிய்யா பழைய மாணவர் அமைப்பின் காத்தான்குடி கிளையின் ஏற்பாட்டில் காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் இளம் உலமாக்கள் மற்றும் அரபுக் கல்லூரிகளின் இறுதி வகுப்பு மாணவர்களுக்கான "குத்பாக்களை வினைத்திறனாக நடாத்துதல்" தொடர்பான பயிற்சிப் பட்டறை காத்தான்குடி ஷெய்குல் பலாஹ் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வின் பிரதான வளவாளராக ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் உஸ்தாத். அஷ்ஷெய்க். எஸ்.எச்.எம்.பழீல் (நளீமி) மற்றும் கொழும்பு அமல் சர்வதேச பாடசாலையின் திறன் விருத்திக்கும் பயிற்றுவிப்புக்குமான பொறுப்பாளர் அஷ்ஷெய்க் ஸப்ரி முஹம்மத் (நளீமி) ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

அறிமுக உரையினை ராபீதத்துன் நளீமிய்யீன் காத்தான்குடிக் கிளை பொறுப்பாளர் அஷ்ஷெய்க் எம். எஸ். எம் நுஸ்ரி (நளீமி) நிகழ்த்தியதோடு குத்பாக்களுக்கான தலைப்பை தெரிவு செய்தலும், வினைத்திறன் மிக்க குத்பா முன்வைப்பும், காலத்திற்கேற்ப குத்பாக்களை ஒழுங்குபடுத்துவதன் அவசியமும் உலமாக்களின் பங்களிப்பும் ஆகிய தலைப்புகளில் விரிவுரைகளும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் கலந்து கொண்ட 50 கதீப்மார்களுக்குமான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு ஸகாத் தொடர்பான மாதிரி குத்பாக்களை கொண்ட நூலும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

# நாவிதன்வெளி பிரதேச செயலக ஏற்பாட்டில் விசேட இப்தார் நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த விசேட இப்தார் நிகழ்வு பிரதேச செயலக திறந்த வெளியரங்கில் கணக்காளர் கே. றிஸ்வி யஹ்சர் ஒருங்கிணைப்போடு பிரதேச செயலாளர் திருமதி.சஜிந்திரன் ராகுல நாயகி தலைமையில் நேற்று (03) நடை பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் வரலாற்றில் ஒரு தசாப்த கால இடைவெளிக்குப் பிறகு நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவை நாவிதன்வெளி ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவரும், கல்முனை அல்- அமியா அரபுக் கல்லூரியின் தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.சி தஸ்தீக் (மதனி) நிகழ்த்தினார்.

இந்த இப்தார் நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவஷரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, நிர்வாக உத்தியோகத்தர் கே யோகேஸ்வரன், உட்பட அலுவலகத்தில் கடமையாற்றும் தமிழ் - முஸ்லிம் உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கார்த்திகைப் பூ புலி இலச்சினை அல்ல தமிழ்த் தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம்!

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன்

கார்த்திகைப் பூவின் வடிவத்தில் பாடசாலை விளையாட்டுப்போட்டி இல்ல வடிவமைப்பு அமைந்ததற்காக அப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விடயத்தைத் தொடர்ந்து, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார்.



அதில் அவர், கார்த்திகைப்பூவை ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் இலச்சினையாகவே பார்க்கிறது. இதனாலேயே தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்றை அழகுபடுத்துவதற்காகக் கார்த்திகைப்பூவை வடிவமைத்த மாணவர்கள் காவல்துறையினால் அறிவிலித்தனமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

கார்த்திகைப்பூவை விடுதலைப்புலிகள் தேசியமலராகத் தெரிவுசெய்திருந்தார்கள் என்பதற்காக அது விடுதலைப்புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த்தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம்.

தமிழர்கள் சுற்றுச்சூழலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்து இயற்கையோடு இசைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்கள். சங்கத் தமிழர்களால் காந்தள் என அழைக்கப்பட்ட கார்த்திகைப்பூ இப்போதும் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாகவே இருந்துவருகிறது.

சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இல்லையென்னும் அளவுக்குத் தமிழ் வாழ்வியலில் கார்த்திகைப்பூ மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவில் தமிழ்நாடு கார்த்திகைப்பூவைத் தனது மாநில மலராகத் தேர்வு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கு அமைவாகத் தேசிய மலராக நீலோற்பலத்தையும் தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் தெரிவு செய்துள்ளது. இலங்கைக் காடுகளில் ஒருபோதும் காணப்படாத சிங்கத்தைத் தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் அதனால் இதுவரையில் இலங்கைக்குரிய தேசிய விலங்கொன்றைத் தெரிவு செய்ய முடியவில்லை.



இலங்கைத் தேசிய அடையாளங்கள் தமிழ் மக்களை உள்வாங்காது பௌத்த, சிங்களப் பெரும் தேசியவாதத்தின் குறியீடுகளாக அமைந்ததன் விளைவாகவே விடுதலைப்புலிகள் தேசிய மலராக ஈழத்தமிழ்ச் சூழலின் அடையாளமாக விளங்கும் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்ய நேர்ந்தது.

கார்த்திகைப்பூச்செடியிலுள்ள கொல்கிசின் என்னும் நச்சு இரசாயனம் அருமருந்துகளின் தயாரிப்பில் பயன்படுகிறது.

இதன் பொருட்டுத் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படும் கார்த்திகைப்பூச் செடியால் பலகோடி ஷரூபாய்கள் அந்நியச்செலாவணியாகக் கிடைத்து வருகிறது.

ஆனால், கார்த்திகைப்பூச்செடியின் சிறப்புகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே கார்த்திகைப்பூவுக்கு உத்தியோகப்பற்றற்ற தடையைப் பேணிவருகிறது.

இயற்கை அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கியெறிந்து தன் பல்லினத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது, என்று குறிப்பிட்டுள்ளார்.






## பட்டியடிப்பிட்டி கிராமத் தாய்மாருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பட்டியடிப்பிட்டியில் வசித்து வரும் பொருளாதார ரீதியில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தாய்மார்களுக்கு அஸீஸா நிறுவனம் ஜேர்மன் -முஸ்லிம் ஹெல்பேஜ் நிறுவனத்தின் தலைவர் ஸாதிக் ஹஸனினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பட்டியடிப்பிட்டி ஜும்மா பள்ளிவாயல் தலைவர் ஸிறாஜ் தலைமையில் மேற்படி உதவியளிப்பு இடம்பெற்றது.

கடந்த கொரோனா காலத்தில் அஸீஸா நிறுவனம் 10 லட்சம் பெறுமதியான புத்தாடைகளை பட்டியடிப்பிட்டி கிராமத்திற்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டாக்காலி மாடுகளினால் விபத்துகள் அதிகரிப்பு!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பாடசாலை மாணவர்களும் பெண்களும் முதியவர்களும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவோர் ஆய்ந்தோய்ந்து பாராமல் தமது பராமரிப்பிலுள்ள மாடுகளை விளைச்சல் நிலங்களிலும் மக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் குறிப்பாக பிரதான வீதிகளில் விடுவதனால் ஆபத்தான பல சம்பவங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்துள்ளதுடன் , அங்கவீனர்களாகவும் இந்த பிரதேசத்தில் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

மாடுகள் கழிக்கும் மலத்தினால் பலவிதமான சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதுடன் அவற்றில் வழுக்கி விபத்துக்களும் சம்பவித்துள்ளன.

கல்முனை மாநகர சபையாலும் ஏனைய பிரதேச சபைகளினாலும் இவ்விடயம் தொடர்பாக பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ச்சியான நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையினால் தொடர்ந்தும் இக்கட்டாக்காலிகள் பிரதான வீதி களிலேயே திரிகின்றன.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2024இல் வெளியிடப்பெற்றது.